HNB

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

வாடிக்கையாளர் கணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு ஏற்புடைத்தானவை.

# ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி. PQ 82

## பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகள் - 2ஆம் பதிப்பு

வாடிக்கையாளர் கணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு பொருந்தும்.

### 01. ஏற்புடைமை

இந்த பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளானவை (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இதன் பின்னர் ‘‘நியதிகள் மற்றும் நிபந்தனைகள்’’ என்று குறிப்பிடப்படும் இப்பதம் அல்லது சொற்பிரயோகமானது இலங்கை ரூபாய் அல்லது வேறுவகையில் குறித்தியம்பப்படும் இலத்திரனியல் வங்கிச் சேவைகள், நடைமுறைக் கணக்குகள், தவணை வைப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிகளை உள்ளடக்கும்) ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி இன் (HNB PLC ) (பதிவிலக்கம் : PQ 82) (‘‘HNB’’ அல்லது ‘‘வங்கி’’ எனவும் குறிப்பிடப்படும்) வாடிக்கையாளர் கணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பரிவர்த்தனைகள், மற்றும் அதன் பின்னுரித்தாளர்கள் மற்றும் சாட்டுனர்களுக்கும் ஏற்புடைத்தானவை என்பதோடு, இச்சொற்பிரயோகம் வங்கியின் எந்தவொரு கிளையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளானவை ‘‘ஏற்ற மாற்றங்களுடன்’’ (விடயங்கள் பற்றிய விபரங்களின் அவசியமான மாற்றங்களுடன்) தனிநபர்கள், பங்காண்மைகள், கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள் உள்ளடங்களான, ஆனால் அவற்றுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இது ஏற்புடைத்தாதல் வேண்டும்.

இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற, திருத்த அல்லது சேர்க்க வங்கிக்கு முழு உரிமையுண்டு. அத்தகைய மாற்றம், திருத்தம் அல்லது சேர்த்தல் அனைத்து வாடிக்கையாளர்களையும் கட்டுப்படுத்துவதாகக் கொள்ளப்பட வேண்டும்.

இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான அனைத்து திருத்தங்களையும் HNB வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெறக்கூடியதாக இருக்கும்.

### 02. வங்கிக் கணக்கு

பின்வருவன தொடர்பில் வாடிக்கையாளார் எதிர்மறையான எழுத்து மூல அறிவித்தலொன்றை வங்கிக்கு வழங்கும் வரை, கணக்கு ஆரம்பிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்படும் செயற்பாட்டு அறிவுறுத்தலின் படி வரையப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம் அல்லது கையொப்பமிடப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய (இனி ‘‘ஆணை’’ எனக் குறிப்பிடப்படும்) செயல்பட வங்கிக்கு அதிகாரம் உள்ளது என்று இதன் மூலம் ஒப்புக்கொள்ளப்படுகின்றது:

i. அத்தகைய கணக்கில் வரவு மீதி இருப்பினும், இல்லாவிடினும், அதில் பற்று வைப்பதன் மூலம், காசோலை, நாணயமாற்று முறி, கடனுறுதிப்பத்திரம், நிலையியற் கட்டளை, நேரடிக் பற்று, வரைவு வழங்கல், இலத்திரனியல் பணப்பரிமாற்றம் மற்றும் தந்திப் பணப்பரிமாற்றம் போன்றவற்றுக்கு பணம் செலுத்துதல், பிணைப் பத்திர மற்றும் வெளிநாட்டு நாணயக் கொள்வனவு மற்றும் விற்பனை, அத்துடன் வேறு ஏதேனும் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படத்தல்ளூ மற்றும்

ii. அத்தகைய கணக்கை மூடிவிடுவதற்கான அறிவுறுத்தல் உட்பட, அத்தகைய கணக்கு தொடர்பான பிற அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளல்.

**03. காசோலைப் புத்தகம்**

ை. வங்கியானது, அதன் முழுமையான தற்றுணிபின் அடிப்படையில் நடைமுறைக் கணக்கொன்றின் மீது காசோலைப் புத்தகமொன்றை வழங்கலாம். காசோலைப் புத்தகமொன்று வழங்கப்படுமிடத்து பாதுகாப்புக்கு வாடிக்கையாளரே எல்லா வேளைகளிலும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காசோலைப் புத்தகம் அல்லது அதிலடங்கியுள்ள ஏதேனும் காசோலைத் தாள் தொலைந்து போனாலோ, களவு போனாலோ அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ வங்கிக்கு அதனை உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

ை.ஏதாவதொரு முறையில் வாடிக்கையாளர் மூலம் காசோலைப் புத்தகமொன்று அல்லது காசோலையொன்று தொலைந்து போகும்போது, வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் காசோலைத் தாளொன்றின் பணக்கொடுப்பனவை நிறுத்துவதற்கான வாடிக்கையாளரின் (ஒன்றில் வாய்மொழி மூலமான அல்லது எழுத்து மூலமான) ஏதேனும் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளும். வாய்மொழி மூலமான வேண்டுகோளை அதே நாளில் எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**04. மேலதிகப்பற்று**

i. ஒரு வாடிக்கையாளரே, வங்கியுடனான அவரது ஏதேனும் கணக்குகள் தொடர்பில் எழும் மேலதிகப்பற்று அல்லது வேறு வசதிகளுக்கு பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், அக்கணக்குகள் தொடர்பில் எழும் அனைத்து அல்லது ஏதேனும் வட்டித் தொகை (கணிக்கப்பட்ட வட்டி உட்பட), தரகுப்பணம், ஏனைய வங்கிக் கட்டணங்களையும் அத்துடன் வங்கியால் காலத்துக்குக் காலம் அதன் முழுமையான தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வீதங்களுக்கு ஏற்ப அது தொடர்பாக ஏற்படும் ஏதாவது வங்கிக் கட்டணங்கள் மற்றும் செலவுகளையும் (ஏதாவது சட்டச் செலவுத் தொகை உட்பட) அவ்வாடிக்கையாளர் வங்கிக்கு பற்று வைப்பதற்கு இத்தால் குறிப்பாக அனுமதியளித்தும் விடுகின்றார். வாடிக்கையாளர், அக்குறிப்பிட்ட கட்டணத் தொகையை வங்கி தனது தற்றுணிபின் பேரில் தேவைப்படுத்துகின்ற முறையிலும், தேவைப்படுத்தும் நேரத்திலும் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

ii. ஒரு கணக்கு தொடர்பில் ஒரு மேலதிகப்பற்று அல்லது ஏனைய வங்கி வசதிகள் வலுவில் இருக்கையில் ஏதேனும் பணத்தொகையொன்று அக்குறிப்பிட்ட கணக்கிற்கு வரவு வைக்கப்படுமிடத்து, அத்தகைய தொகையானது செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வட்டித் தொகை (கூட்டு வட்டி உள்ளடங்களாக) இருப்பின் அவை முழுமையாக செலுத்தி முடிக்கப்படும் வரை, அவற்றை ஈடு செய்வதற்கு வங்கியால் அவை முதலில் பயன்படுத்தப்பட வேண்டும். அதன்பின்னர், அவ்வவாறு வரவு வைக்கப்பட்ட அத்தொகையானது ஏதேனும் மேலதிகப்பற்று அல்லது ஏனைய வங்கி வசதிகளின் முதல் தொகையை ஈடு செய்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

**05. வைப்புகளும், மீளப்பெறுகைகளும்**

வைப்புகளும்/வைப்புக்களும், மீளப்பெறுகையும்/மீளப்பெறுகைகளும் இலங்கையில் தற்போது வலுவிலுள்ள சட்டங்களால் ஆளப்படும். வங்கி திருப்திப்படும் வகையிலான ஆளடையாளச் சான்று சமர்ப்பிக்கப்படுவதற்கமைவாகவும், காலத்துக்குக் காலம் வங்கியால் அறவிடப்படக்கூடிய எவையேனும் வழமையான கட்டணங்கள் செலுத்தப்படுவதன் மீதும், இலங்கையில் உள்ள எந்தக் கிளையிலும் பணம் மீளப்பெறுதலை அனுமதிப்பதற்கான தற்றுணிபை வங்கி கொண்டுள்ளது.

**06. கணக்குகளைப் பேணிவருதல்**

**i. காலக்கிரம கணக்குமீதிக் கூற்றுகள்**

வேறு வகையில் உடன்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, வங்கியால் தீர்மானிக்கப்பட வேண்டிய அத்தகைய கால இடைவெளிகளில் வாடிக்கையாளர் கணக்குகளுக்கான காலக்கிரம கணக்குமீதிக் கூற்றுகளை வங்கியானது வழங்கிவரும்.

**ii. ஆட்சேபனைக்கான காலக்கெடு**

வாடிக்கையாளரால் பெறப்பட்ட ஒரு காலக்கிரம கணக்குமீதிக் கூற்றின் சரியான தன்மை மற்றும் முழுமையற்ற தன்மை தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவருக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை உடனடியாக முன்வைத்தல் வேண்டும் என்பதுடன், எவ்வாறாயியும் அத்தகைய விபரக்கூற்று கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக எழுத்து மூலமான ஆட்சேபனை வங்கிக்கு கிடைக்கப்பெற வேண்டும்.

**07. கூட்டுக் கணக்கும், பங்காண்மைக் கணக்கும்**

i. வாடிக்கையாளர் கணக்கொன்று கூட்டுக் கணக்காக இருக்கும் பட்சத்தில், அத்தகைய கணக்கின மீது வழங்கப்படக் கூடிய ஏதேனும் மேலதிகப்பற்று, கடன் அல்லது வேறு ஏதேனும் கடன் வசதிகள் அல்லது நிதிவசதிகள் என்பவற்றுடன், வட்டி, தரகு மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்களுக்கும் செலவுகளுக்கும் கூட்டுக் கணக்காளர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

ii. கூட்டுக் கணக்காளர்களுள் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ மரணிக்கும் சந்தர்ப்பங்களில், வங்கியானது, கூட்டுக் கணக்காளர்களது பெயரிலுள்ள ஏதேனும் கணக்கு தொடர்பாக வங்கியால் வைத்திருக்கப்படும் அல்லது அதன் வரவிலுள்ள பணம், பிணைப்பொறுப்பு, உறுதிகள், ஆவணங்கள், மற்றும் (பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் உட்பட) அத்தகைய வேறு ஏனைய ஆதனங்கள் அனைத்தையும், மரணித்த கூட்டுக் கணக்காளர் அல்லது கூட்டுக் கணக்காளர்களது சட்டரீதியான வாரிசுகளுக்கு அல்லது பிரதிநிதிகளுக்கு ஆற்றுப்படுத்தாது உயிருடனிருக்கும் மற்றைய கணக்காளரது அல்லது கணக்காளர்களின் ஆணைக்குச் செலுத்துதல் அல்லது ஒப்படைத்தல் வேண்டும்.

iii. கூட்டுக் கணக்காளர்களுள் ஒருவரது அல்லது அதற்கு மேற்பட்டோரது மரணம் பற்றிய அறிவித்தல் கிடைத்ததும், அத்தகைய ஏதேனும் கணக்கு தொடர்பாக வங்கியால் வைத்திருக்கப்படும் அல்லது அதன் வரவிலுள்ள பணங்கள், பிணைப்பொறுப்புகள், உறுதிகள், ஆவணங்கள், மற்றும் அத்தகைய வேறு ஏதேனும் ஆதனங்கள் அனைத்தையும் உயிருடனிருக்கும் மற்றைய கணக்காளரது அல்லது கணக்காளர்களின் ஆணைக்குச் செலுத்திய அல்லது ஒப்படைத்த பின் மரணித்த கூட்டுக் கணக்காளர் அல்லது கூட்டுக் கணக்காளர்களின் மீதான கடப்பாடுகளிலிருந்து வங்கியானது முழுமையாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

iv. வங்கியினால் வழங்கப்பட அனுமதிக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அனைத்துக்கும் பங்காண்மைக் கணக்காளர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

**08. சேமிப்புக் கணக்கு(களு)க்கான நியதிகளும் நிபந்தனைகளும்**

i. வங்கியின் எந்தக் கிளையிலும் வைப்புகள் மேற்கொள்ளப்படலாம். இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரிவு 5 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வங்கியின் அத்தகைய எந்தக் கிளையிலும் மீள்பெறுகைகளையும் மேற்கொள்ளலாம்.

ii. 24 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செயலற்றதாக காணப்படும் கணக்கானது உறங்குநிலைக் கணக்காக வகைப்படுத்தப்படும்.

iii. தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த இருப்பை விடக் குறைவான மீதியைக் கொண்டதாகவும், 24 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செயலற்றதாகவும் காணப்படும் கணக்கொன்று முன் அறிவித்தலின்றி வங்கியால் மூடப்படலாம். தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த இருப்பை விடக் குறைவான மீதியைக் கொண்ட செயலிலுள்ள கணக்குகளுக்கு வங்கியால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்படும் மாதாந்தக் கட்டணமொன்று விதிக்கப்படலாம். அத்தகைய கணக்குகள் வாடிக்கையாளருக்கு முன் அறிவித்தல் வழங்கப்பட்ட பின் வங்கியின் தற்றுணிபின் பேரில் மூடப்படலாம்.

iv. சேமிப்புக் கணக்குகளின் வரவுக்கான காசோலை.ஃ.கள், வரைவு.ஃ.கள் மற்றும் காசுக் கட்டளை.ஃ.கள் ஆகியன வங்கியின் தற்றுணிபின் பேரில் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படலாம்.

v. IBU (இஸ்லாமிய வங்கிப் பிரிவு) வாடிக்கையாளர்களுக்கு சேமிப்புக் கணக்கு மீதான வட்டி இருக்காது.

vi. ஒரு சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர், இலத்திரனியல் விபரக்கூற்று வசதியை அல்லது வைப்புப் புத்தகமொன்றை கோருவதற்கான விருப்பத்தெரிவைக் கொண்டுள்ளார். அந்த வைப்புப் புத்தகத்தின் பாதுகாப்பு கணக்குடையவரது பொறுப்பாதல் வேண்டும். அந்த வைப்புப் புத்தகம் தொலைந்து போனாலோ, களவு போனாலோ அல்லது இடம் தவறிப் போனாலோ, அது பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

vii. ஏற்புடைத்தானவிடத்து, வைப்புச் செய்யப்பட்ட அல்லது மீளப்பெறப்பட்ட பணம் எதுவும், வைப்புப் புத்தகம் கரும பீடத்தில் சமர்ப்பிக்கப்படின், வங்கியால் வைப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும். வங்கியை விட்டுச் செல்வதற்கு முன் தமது வைப்புப் புத்தகத்திலுள்ள பதிவுகளை கணக்குடைமையாளர் கவனமாகப்

பரிசீலித்து, அதில் பதியப்பட்டவை சரியானவை எனத் திருப்திப்படுதல் வேண்டும். ஏதேனும் முரண்பாடு இருப்பின் வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

viii. வைப்புப் புத்தகமானது, செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுவதற்காக ஆகக்குறைந்தது ஒவ்வொரு ஆறு (06) மாதங்களுக்கு ஒரு முறையேனும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வைப்புப் புத்தகம் சமர்ப்பிக்கப்படும் திகதிக்கு மூன்று (03) ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வைப்புப் புத்தகத்திலே பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெறாது. தேவைப்படுத்தப்பட்ட நியதிச் சட்டக் காலப்பகுதியை விஞ்சிய கொடுக்கல் வாங்கல் பற்றிய பதிவுகளை வங்கி பேணிவைத்திருக்க மாட்டாது.

ix. இந்தப் பிரிவின் பந்தி vii இற்கு ஏற்ப, வைப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரக் கூற்றினை, தனது தற்றுணிபின் அடிப்படையில், சாதாரண தபால் மூலம் அனுப்புவதற்கான உரித்தைத வங்கி தக்கவைத்துள்ளது.

x. தானியங்கி காசளிப்பு இயந்திரம் (இதனகத்துப் பின்னர் 'ATM' என குறிப்பீடு செய்யப்டும்) மூலம் அல்லது வைப்புப் புத்தகமும், முறையாக பூரணப்படுத்தப்பட்ட மீள்பெறுகை படிவமும் சமர்ப்பிக்கப்படுகையில், வங்கிக் கரும பீடத்திலிருந்து, கணக்கு வைத்திருப்பவரால் பணத்தை மீளப்பெற முடியும். வங்கிக் கரும பீடத்திலிருந்து பணத்தை மீளப்பெறும் போது, சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர் அவரது வைப்புப் புத்தகம், தேசிய அடையாள அட்டை அல்லது வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படும் வேறு ஆளடையாள ஆவணம் என்பவற்றுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட மீள்பெறுகை படிவத்தையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

xi. ATM / பண வைப்பு இயந்திரம் (BDM அல்லது CDM) அல்லது ஏனைய இலக்கமுறை தடங்கள் ஏதோவொன்றின் மூலமான கொடுக்கல் வாங்கல்கள் எதுவும், அத்தகைய இயந்திரத்தின் பயன்பாடு பற்றிய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாக இருக்கும்.

xii. கணக்கு வைத்திருப்பவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சேமிப்பு வைப்புப் புத்தகம் தொலைந்து போகும் சந்தர்ப்பமொன்றில், தேவையான ஆவணத்துடன் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றை கணக்கு வைத்திருப்பவர் சமர்ப்பிப்பதன் மீது, வங்கியின் தற்றுணிபின் பேரில் அதே போன்ற பிரதியொன்றை வழங்கலாம். அத்துடன், வங்கியால் காலத்துக்கு காலம் நியமிக்கப்படும் கட்டணமொன்றும் அதற்காக அறவிடப்படும்.

xiii. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் அமைப்பு மூலம் தமது தேசிய அடையாள அட்டை தொடர்பான விபரங்களின் நம்பகத் தன்மையை சரிபார்க்க HNB வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

xiv. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக தம்மை புகைப்படம் எடுப்பதற்கு HNB வங்கியின் உத்தரவாதமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

**09. நடைமுறைக் கணக்கு ஒன்றிற்கான நியதிகளும் நிபந்தனைகளும்**

i. வங்கியின் பணி நேரங்கள் HNB யின் அந்தந்தக் கிளைகளினால் அறிவிக்கப்பட்டதாக இருக்கும்.

ii. நடைமுறைக் கணக்கில் உள்ள எந்த மீதிக்காகவும் வட்டி செலுத்தப்பட மாட்டாது.

iii. பெயரளவிலான கட்டணமொன்று செலுத்தப்படுவதன் மீது, தகைமையுடைய நடைமுறைக் கணக்குகளுக்கான காசோலைப் புத்தகமொன்று வழங்கப்படும். எவ்வாறாயினும், காசோலைப் புத்தகத்தை நெறிப்படுத்தும் போது இலங்கை அரசாங்கத்தினாலும், தீர்வையகத்தினாலும் அறவிடப்படும் வரிகளும், ஏனைய கட்டணங்களும் நடைமுறைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

iv. காசோலையை ∴ காசோலைகளைப் பயன்படுத்தும் போது, பின்வருவன தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

- அதிகாரமளிக்கப்படாத ஆள் எவரும் காசோலைப் புத்தகமொன்றை அணுகிப் பயன்படுத்த அனுமதிக்கப்படக் கூடாது. வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலைப் புத்தகத்தை பாதுகாத்தல் தொடர்பில், வாடிக்கையாளரின் கவனயீனத்தால் போலி ஒப்பமிடப்பட்ட காசோலையொன்றுக்கு பணம் செலுத்தப்படும் போது வங்கி பொறுப்பாளியாகக் கொள்ளப்படுதல் ஆகாது.
- காசோலையொன்றை வழங்கும் போது, அது எத்தொகைக்காக வழங்கப்படுகிறதோ அத்தொகையானது எழுத்திலும், இலக்கங்களிலும் தெளிவாக எழுதப்படல் வேண்டும் என்பதுடன், நிலவரத்துக்கேற்ப, ஏதேனும் இலக்கத்தை அல்லது எழுத்துக்களை அதன்பின் சேர்ப்பதற்கு இடமளிப்பதாக அமையும் வகையிலான இடைவெளி எதுவும் விடப்படல் ஆகாது.
- காசோலையொன்றின் மீது ஏதாவது திருத்தம் செய்ய வேண்டியேற்படின், அத்திருத்தமானது காசோலை வரைபவரின் முழு ஒப்பத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- செல்லுபடியாகும் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படும் திகதிக்கு ஆறு (06) மாதங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு முன்னரான திகதியொன்றைக் கொண்டிருக்கும் ஏதேனும் காசோலையொன்றுக்கு வங்கியானது கொடுப்பனவு செய்ய மறுக்கலாம். (செல்லுபடியாகும் காலம் குறிப்பாக அச்சிடப்படாத போது).
- பின் திகதியிடப்பட்ட காசோலையொன்று தவறுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டு, வாடிக்கையாளரது கணக்கில் பற்று வைக்கப்படுமிடத்து, வங்கியானது பொறுப்பெதனையும் ஏற்றுக்கொள்ளாது. பின் திகதியிடப்பட்ட காசோலையென்பது, அது கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படும் திகதிக்குப் பின்னரான திகதியொன்றைக் கொண்டிருப்பதாகும்.
- வங்கியானது, தேறப்படாத வருமதிகளுக்கெதிராக காசோலையொன்றைக் கொடுப்பனவு செய்யப் பிணிக்கப்பட்டதன்று.
- வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலைப் புத்தகம் அல்லது காசோலைத் தாளொன்று தொலைந்து போயின், அதுபற்றி கிளைக்கு உடனடியாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

v. வாடிக்கையாளரொருவர், தமது கணக்கில் வைப்புச் செய்வதற்காக, அது தொடர்பான அடிக்கட்டை அல்லது பற்றுச் சீட்டின் மீது, இந்த நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வங்கியின் காசளிப்பு இயந்திரம் அல்லது பண வைப்பு இயந்திரத்தின் (CDM) மூலம் மேலச்சிடப்பட்டாலன்றி, வங்கியின் அலுவலகர் ஒருவரது கையொப்பத்தை பெறத் வேண்டியவராகின்றார்.

vi. ஏலவே வங்கியுடன் ஒழுங்கொன்று செய்யப்பட்டிருந்தாலன்றி, வாடிக்கையாளர் ஒருவர் தமது கணக்கிலிருந்து பணம் மீளப் பெறுகையில், இருக்கும் மீதத்தை விஞ்சுவதாக பணமெடுத்தல் ஆகாது. எச்சந்தர்ப்பத்திலும், அவரது கணக்கில் அத்தினத்தன்று இருப்பதாகத் தீர்க்கப்பட்ட இருப்பு மீதத்தை விஞ்சுவதாகச் செலுத்தப்படும் அத்தகைய தொகை சார்பாக ஏற்புடைத்தான வீதத்தில் வட்டி செலுத்துவதற்கு வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

vii. மேலுமொரு காசோலை வழங்குவதற்காக இருக்கும் மீதத்தை தீர்மானிக்கையில், வாடிக்கையாளர் ஒருவர், அவருக்கு வழங்கப்பட்டு ஆனால் இதுவரை கொடுப்பனவுக்காக வங்கிக்கு முன்வைக்கப்படாத எல்லாக் காசோலைகளையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

viii. வங்கியானது, நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவருக்கும், வாடிக்கையாளரால் வேண்டப்படக் கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில், கணக்கு விபரக்கூற்றொன்றைக் கொடுக்கும், அல்லது வாடிக்கையாளரால் ஆன எவையேனும அறிவுறுத்தல்கள் இல்லாதவிடத்து, வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் விபரக்கூற்றுக்கள் அனுப்பப்படுதல்வேண்டும். கணக்கு விபரக்கூற்று பெறப்பட்ட உடனேயே, அது கவனமாகப் பரிசீலிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதனுள் ஏதேனும் முரண்பாடு இருப்பின் அது வங்கியின் கவனத்துக்கு கொண்டுவரப்படுதலும் வேண்டும். வாடிக்கையாளர், விபரக்கூற்றின் காகிதப் பிரதிக்குப் பதிலாக இலத்திரனியல் விபரக்கூற்றுகளை கோருவதற்கான விருப்பத்தெரிவைக் கொண்டுள்ளார். வங்கியினால் அதன் நிலையான வடிவத்தில் வழங்கப்படும் காகிதப் பிரதிகள் வங்கி அதிகாரிகளின் கையொப்பங்களை கொண்டிருப்பது அவசியமானதன்று.

ix. வழங்கப்படும் சேவைகளுக்காக, வங்கியானது ஏற்புடைத்தானவிடத்து, தரகுக் கட்டணங்களை விதிக்கும். மேலும், வங்கியானது நிராகரிக்கப்பட்ட ஒவ்வொரு காசோலை மீதும் அல்லது எந்தக் காசோலை மீது

கணக்குடைமையாளரால் கொடுப்பனவு நிறுத்தப்படுகிறதோ அந்தக் காசோலை மீது கட்டணமொன்றை விதிக்கும். வங்கியானது, காசோலையொன்றின் மீது கொடுப்பனவு நிறுத்தப்படுவதற்காக வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களைப் பதிவு செய்யும். ஏவ்வாறாயினும், வங்கி அத்தகைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறின், அது பொறுப்பாளியாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

x. ATM / பண வைப்பு இயந்திரம் (BDM அல்லது CDM) அல்லது ஏனைய இலக்கமுறை தடங்கள் ஏதோவொன்றின் மூலமான கொடுக்கல் வாங்கல்கள் எதுவும், அத்தகைய இயந்திரத்தின் பயன்பாடு பற்றிய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாக இருக்கும்.

xi. நடைமுறைக் கணக்கிலுள்ள பணத்திற்கான பின்னுரித்துகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

xii. 24 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் செயலற்றதாக காணப்படும் கணக்கொன்று உறங்குநிலைக் கணக்காக வகைப்படுத்தப்படும்.

xiii. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் அமைப்பு மூலம் தமது தேசிய அடையாள அட்டை தொடர்பான விபரங்களின் நம்பகத் தன்மையை சரிபார்க்க HNB வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

xiv. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக தம்மை புகைப்படம் எடுப்பதற்கு HNB வங்கியின் உத்தரவாதமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

**10. வைப்புக் கணக்கு ஒன்றிற்கான நியதிகளும் நிபந்தனைகளும்**

i. வங்கியானது, வைப்பாளர் ஒருவருக்கு, அவரது வைப்பு ஆரம்ப வைப்பாக இருப்பினும் அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்பாக இருப்பினும், அந்த வைப்புக் காலப்பகுதியின் போது அந்த வைப்பை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை விடுவிப்பதற்கு கடப்பாடெதுவும் உடையதல்ல.

ii. வைப்புச் செய்யப்பட்ட நேரத்தில் வைப்பாளரொருவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட தவணை வைப்புக் கணக்குக்கான சான்றிதழ் அல்லது பற்றுச்சீட்டு எதுவும் கைமாற்றத்தக்கதன்று.

iii. தவணை வைப்பொன்று அது ஆரம்ப வைப்பாக இருப்பினும் அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்பாக இருப்பினும், அந்தக் தவணைவைப்பில் உள்ள ஏதேனும் பணம் விடுவிக்கப்படுவதற்கு, அந்தக் தவணைவைப்பின் தவணை அல்லது காலப்பகுதி காலாவதியாதல், மற்றும் முறைப்படி விடுவிக்கப்பட்ட அதன் சான்றிதழ் / பற்றுச்சீட்டு / வாடிக்கையாளர் கோரிக்கை என்பன வங்கியிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்பன பொது நிபந்தனைகளாகும்.

iv. வைப்பொன்றின் முதிர்வுத்திகதி காலாவதியான பின்னர் அல்லது வைப்பாளரின் மரணத்துக்குப் பின்னர் வட்டியெதுவும் அதிகரித்துக்கொண்டு போகாது.

v. வைப்பாளரொருவரால் அந்த வைப்பின் நடப்புத் தவணை முடிவடைவதற்கு ஆகக் குறைந்தது ஏழு (07) வேலை நாட்கள் முன்னராக மாறான அறிவுறுத்தல்கள் வங்கிக்கு வழங்கப்பட்டாலன்றி, அவ்வாறு செய்வதற்கு வங்கி கடப்பாடு கொண்டதாக இல்லாதிருத்தல் வேண்டுமெனினும், அதன் மீது சேர்ந்த வட்டி ஏதேனும் இருப்பின் அதனையும் சேர்த்து, இதனகத்து அமைந்துள்ள நியதிகள் நிபந்தனைகள் அல்லது வங்கி அவசியமெனக் கருதும் வேறு ஏதேனும் நிபந்தனைகளுக்கு அமைவாக, அந்தக் தவணைவைப்பை வங்கியின் தற்றுணிபில் மேலும் ஒரு காலப்பகுதிக்கு புதிப்பிப்பதற்கு வங்கியானது உரிமையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

xv. வைப்பாளர் ஒருவருக்கு வங்கியால் வழங்கப்பட்ட தவணைவைப்புச் சான்றிதழ்/பற்றுச்சீட்டு தொலைந்து போகும் சந்தர்ப்பமொன்றில், எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றை வைப்பாளர் சமர்ப்பிப்பதன் மீது, வங்கியின் தற்றுணிபின் பேரில் அதே போன்ற பிரதியொன்றை வங்கி வழங்கலாம். அத்துடன், வங்கியால் காலத்துக்கு காலம் நியமிக்கப்படும் கட்டணமொன்றும் அதற்காக அறவிடப்படும்.

vi. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் அமைப்பு மூலம் தமது தேசிய அடையாள அட்டை தொடர்பான விபரங்களின் நம்பகத் தன்மையை சரிபார்க்க ர்ேடீ வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

vii. கணக்கு வைத்திருப்பவர்/கள், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக தம்மை புகைப்படம் எடுப்பதற்கு HNB வங்கியின் உத்தரவாதமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

## 11. இலத்திரனியல் வங்கிச் சேவைக்கான நியதிகளும் நிபந்தனைகளும்

### (அ) இணைய வங்கிச் சேவை

xvi. “இணைய வங்கி”ச் சேவை வசதியைப் பயன்படுத்த தேவையான கடவுச்சொல் / பயனர் அடையாளக்குறி மிக இரகசியமானது என்பதுடன் எந்தச் சூழ்நிலையிலும், எந்நேரத்திலும் எந்த நபருக்கும் வெளிப்படுத்தப்படுதலும் ஆகாது.

i. கடவுச் சொற்கள், வாடிக்கையாளர் வழங்கிய முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் அல்லது விண்ணப்பத்தில் வாடிக்கையாளார் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்படும். வாடிக்கையாளர் கொடுத்த முகவரி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு கடவுச்சொல் அனுப்பப்பட்டவுடன் வங்கியின் கடப்பாடு நீங்கிவிடும்.

ii. வாடிக்கையாளரது கடவுச்சொல் / பயனர் அடையாளக்குறி அதிகாரமளிக்கப்படாத வெளிநபரொருவரது கைகளில் கிடைப்பின், அது அவரால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

iii. “இணைய வங்கி”ச் சேவை வசதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவேடுகளும், கூற்றுக்களும், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள பற்றிய போதுமான மற்றும் உறுதியான சான்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவை எல்லா நோக்கங்களுக்கும் ஒரு பயனரை பிணிப்பனவாதலும் வேண்டும்.

iv. “இணைய வங்கி”ச் சேவை வசதியைப் பயன்படுத்தி பயனரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தலை மாற்றியமைப்பதற்கு, நெறிப்படுத்தாது விடுவதற்கு மற்றும்/அல்லது நெறிப்படுத்தலை தாமதப்படுத்துவதற்கான உரிமையை வங்கியானது தனக்கென ஒதுக்கி வைத்துள்ளது.

xvii. எந்தவொரு சந்தேகத்தையும் தவிர்ப்பதற்காக, நடைமுறைக் கணக்கு/சேமிப்புக் கணக்கு மற்றும் ஏற்புடைத்தான ஏனைய கணக்குகளை நிர்வகிக்கும் நியதிகள் நிபந்தனைகள் “இணைய வங்கி”ச் சேவை பயனரைப் பிணிக்கும் என இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

v. “இணைய வங்கி”ச் சேவைப் பயன்பாடானது அவ்வப்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதுடன், அந்த வசதியை வங்கியானது தனது முற்றுமுழுதான தற்றுணிபில் திரும்பப் பெறலாம்.

vi. மென்பொருள் மற்றும் ஆவணத்தொகுப்பு என்பவற்றுக்கான உரிமம் - இலத்திரனியல் வங்கிச் சேவைகளை (அவை இணைய வங்கியையும் உள்ளடக்கும், ஆனால் அதற்கு மட்டுமே மட்டுப்பபடுத்தப்பட்டதல்ல) விரிவுபடுத்தும் போது, வங்கியானது வாடிக்கையாளரால் தேர்ந்தொடுக்கப்பட்ட கணினிச் சாதனத்தில் வங்கியின் இலத்திரனியல் வங்கிச் சேவைகளை பயன்படுத்துவதற்கான இலத்திரனியல் வங்கிச் சேவைகளை அணுகும் மென்பொருட்களையும், ஆவணத் தொகுப்பையும், இலத்திரனியல் வங்கியுடன் (இலத்திரனியல் வங்கிச் சாதனங்கள்) தொடர்புபட்ட வங்கியினால் வழங்கப்படும் எவையேனும் மீளாய்வுகளையும் பயன்படுத்துவதற்கான கைமாற்றத்தகாத, பிரத்தியேகமற்ற உரிமமொன்றை வாடிக்கையாளருக்கு வழங்கும். வாடிக்கையாளர் அத்தகைய சாதனத்துக்கும், தொடர்புடைய பரிமாற்ற இணைப்புகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். வாடிக்கையாளர், எந்நேரத்திலும் அந்த இலத்திரனியல் வங்கிச் சேவைச் சாதனங்களை (பாதுகாப்புத் தேவைகளுக்காக இலத்திரனியல் வங்கி மென்பொருள் தவிர்த்து) கண்டிப்பாக இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்பதுடன், வங்கியின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி அத்தகைய சாதனங்களை நகலெடுத்தலோ அல்லது அவற்றை வேறு நபர் யாரேனும் அணுகுவதற்கு அனுமதித்தலோ ஆகாது. அந்த இலத்திரனியல் வங்கிச் சேவைச் சாதனங்களும், அவற்றின் எல்லா நகல்களும், அவற்றிலமைந்த புலமைச் சொத்துரிமைகளும் எப்போதுமே பிரத்தியேகமான வங்கியின் சொத்துக்களாயிருத்தல் வேண்டும்.

vii. ஏதேனும் தொழிநுட்ப கோளாற காரணமாக, இணைய வங்கி மூலம் ஒரு பரிவர்தனை முடிந்த உடனேயே இணையத்தள கணக்கு மீதி கிடைக்காமற் போனமைக்கு வங்கி எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

viii. இணைய வங்கிச் சேவையைப் பெறுவதானது, வங்கியினால் அவ்வப்போது அறவிடப்படும் சேவைக் கட்டணத்துக்கு உட்பட்ட ஒரு விடயமாகும்.

**<u>(ஆ) அலைபேசி வங்கிச் சேவை</u>**

i. ''அலைபேசி வங்கி''ச் சேவை வசதியைப் பயன்படுத்த தேவையான கடவுச்சொல் / பயனர் அடையாளக்குறி கண்டிப்பாக மிக இரகசியமானது என்பதுடன் எந்தச் சூழ்நிலையிலும், எந்நேரத்திலும் எந்த நபருக்கும் வெளிப்படுத்தப்படுதலும் ஆகாது.

ii. வாடிக்கையாளரது கடவுச்சொல் அதிகாரமளிக்கப்படாத வெளிநபரொருவரது கைகளில் கிடைப்பின், அது அவரால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

iii. ''அலைபேசி வங்கி''ச் சேவை வசதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவேடுகளும், கூற்றுக்களும், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள பற்றிய போதுமான மற்றும் உறுதியான சான்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவை எல்லா நோக்கங்களுக்கும் ஒரு பயனரை பிணிப்பனவாதலும் வேண்டும்.

iv. ''அலைபேசி வங்கி''ச் சேவை வசதியைப் பயன்படுத்தி பயனரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தலை மாற்றியமைப்பதற்கு, நெறிப்படுத்தாது விடுவதற்கு மற்றும் /அல்லது நெறிப்படுத்தலை தாமதப்படுத்துவதற்கான உரிமையை வங்கியானது தனக்கென ஒதுக்கி வைத்துள்ளது.

v. ''அலைபேசி வங்கி''ச் சேவைப் பயன்பாடானது அவ்வப்போது பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதுடன், அந்த வசதியை வங்கியானது தனது முற்றுமுழுதான தற்றுணிபில் திரும்பப் பெறலாம்.

vi. ஏதேனும் தொழில்நுட்ப கோளாற காரணமாக, குறுந்தகவல் கிடைக்காமற் போனமைக்கு வங்கி எவ்வகையிலும் பொறுப்பேற்காது. உபகரணங்களின் தெரிவு, பராமரிப்புக்கு மற்றும் ''அலைபேசி வங்கி''ச் சேவையில் ஈடுபடுவதற்குப் பயன்படுத்தப்படும் தொடர்புடைய பரிமாற்ற இணைப்பு என்பவற்றுக்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார்.

vii. கொடுக்கல் வாங்கலொன்றை நெறிப்படுத்துவதற்காக நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்படும் போது ''அண்மித்த பெறுமதி'' மாத்திரமே குறுந்தகவல் எச்சரிக்கை மூலம் வெளிக்காட்டப்படும்.

viii. வங்கியால் வேறுவிதமாக தீர்மானிக்கப்பட்டாலே தவிர, ஒருவருக்கு மேற்பட்ட பணிப்பாளரைக் கொண்டுள்ள கூட்டிணைப்பு நிறுவன வாடிக்கையாளர்கள் உட்பட, வணிக நிறுவனங்களுக்கு, ''அலைபேசி வங்கி''ச் சேவை கிடைக்கப்பெறாது.

ix. இணைய வங்கிச் சேவையைப் பெறுவதானது, வங்கியினால் அவ்வப்போது அறவிடப்படும் சேவைக் கட்டணத்துக்கு உட்பட்ட ஒரு விடயமாகும்.

**<u>(இ) தன்னியக்க காசளிப்பு இயந்திர வங்கிச் சேவை மற்றும் பற்றுஅட்டை (டெபிட் கார்ட்)</u>**

வாடிக்கையாளரானவர் -

i. எல்லா நேரங்களிலும் அட்டையை (எந்தவொரு சந்தேகத்தையும் தவிர்ப்பதற்காக இங்கு பயன்படுத்தப்படும் ''அட்டை'' என்ற வார்த்தை ஒரு பற்று அட்டை (Debit Card) என்று பொருள்படும் என்பதுடன், ஆனால், ஒரு கடனட்டை என்பதை உள்ளடக்காது) வங்கியின் சொத்தாகக் கருதி, வங்கியின் கோரிக்கையின் பேரில் நிபந்தனையற்ற முறையில் மற்றும் எவ்வித பிடிமானமும் இல்லாமல் அதை ஒப்படைக்க வேண்டும்.

ii. மீளப் பெறுவதற்கு அல்லது பரிமாற்றத்தை ஈடுசெய்ய போதுமான பணம் கணக்கில் இருந்தாலன்றி, எந்த நேரத்திலும் இவ்வட்டையை பயன்படுத்தவோ, பயன்படுத்த முயற்சிக்கவோ கூடாது.

iii. அட்டை கைமாற்றத்தக்கதல்ல என்பதால், அட்டையை அவரே பிரத்தியேகமானதாகப் பயன்படுத்த வேண்டும்.

iv. வங்கியால் அல்லது வங்கியின் சார்பாக செயற்படும் எவரேனும் நபரொருவரினால், அந்த அட்டையானது இரத்துச் செய்யப்பட்டுள்ளது அல்லது மீட்டுப்பெறப்பட்டுள்ளது என அறிவித்தலொன்று அவருக்க கொடுக்கப்பட்ட பின்னர் அதனை பயன்படுத்தவோ, பயன்படுத்த முயற்சிக்கவோ கூடாது.

v. அவருக்கென குறித்தொதுக்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN)> வங்கியின் காசளிப்பு இயந்திரத்தில் அட்டைப் பயன்பாட்டு வசதியைப் பெறுவதற்காக எவரேனும் நபருக்கு எந்த சூழ்நிலையிலும் எந்நேரத்திலும் வெளிப்படுத்தக் கூடாது.

vi. இவ்வட்டை காணாமல் போனால் அல்லது திருடப்பட்டால் அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்பதுடன், வங்கியால் விதந்துரைக்கப்பட்டவாறு அவ்வட்டையின் மாற்றீட்டுச் செலவை பொறுப்பேற்றலும் வேண்டும்.

vii. இவ்வட்டை காணாமல் போனமை அல்லது திருடப்பட்டமை அல்லது அங்கீகரிக்கப்படாத முறையில் யாராவது PIN இலக்கத்தை பெறுதல் பற்றிய அறிவித்தலை வங்கி பெற்றுள்ளது என வங்கி வாடிக்கையாளருக்கு உறுதிப்படுத்திய பின்னர் இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த, அந்த அட்டையப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

viii. மேற்குறிப்பிட்ட பந்தி vii இற்கு ஏற்ப, மீளப்பெறுதல் அல்லது/மற்றும் பணப்பரிமாற்றங்கள் பற்றிய வங்கியின் பதிவை எல்லா நோக்கங்களுக்காகவும், முடிவானதாகவும் பிணிப்பதாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அவருக்கு தெரிந்தோ, தெரியாமலோ அல்லது அவரது அங்கீகாரத்துடனோ மீளப்பெறப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஏதேனும் தொகையை அவரது கணக்கில் வங்கி பற்று வைக்க வங்கிக்கு அதிகாரமளித்தலும் வேண்டும்.

ix. தன்னியக்க காசளிப்பு இயந்திரத் திரையின் மீது அல்லது அச்சிடப்பட்ட விசாரிப்புச் சீட்டு அல்லது பற்றுச்சீட்டுத் அறிவித்தலில் சொல்லப்பட்ட தொகை, எந்நோக்கத்துக்காகவும், வங்கியிலுள்ள வாடிக்கையாளரின் கணக்கின் நிலை பற்றிய இறுதி முடிவாகக் கொள்ளப்படுதலாகாது என்பதை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

x. இவ்வட்டையின் அல்லது தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தின் பிறழ் செயற்பாடு அல்லது செயலிழப்பு, அல்லது தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தில் பணம் போதாமை என்பவற்றால் ஏதேனும் வகையில் எழும் அல்லது நிகழும் ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்காக வங்கியை இலக்காக்குவதோ, பொறுப்பாக்குவதோ அல்லது வகைசொல்வதற்காக்குவதோ ஆகாது.

xi. மேற்கூறப்பட்ட பந்தி x இன் ஏற்பாடுகளில் என்ன கூறப்பட்டிருந்தாலும் அதன் பொது விதிகளுக்குப் பாதிப்பில்லாத வகையில், அந்த அட்டையை ஆபத்தை பொறுப்பேற்கும் தன் சொந்த கண்காணிப்பில் பயன்படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்த அட்டையின் பயன்பாட்டின் விளைவாக அல்லது அதிலிருந்தெழும் ஏதேனும் தற்செயலான பாதிப்பை ஏற்றுக் கொள்ளுதலும் வேண்டும்.

xii. எந்தவொரு காரணத்தினாலும் அட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தப்படாமைக்கு வங்கி பொறுப்பேற்காது என்பதை ஏற்றுக் கொள்ளுதலும் வேண்டும்.

xiii. இவ்வட்டை இனிமேலும் தேவைப்படாத போது அல்லது ஏதேனும் காரணத்துக்காக வங்கியிலுள்ள கணக்கு மூடப்படுமாயின், அதனை இரத்துச் செய்வதற்காக திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

xiv. வாடிக்கையாளருக்கு முன் அறிவித்தல் கொடுக்காமல், எந்த நேரத்திலும் இவ்வட்டையை இரத்துச் செய்வதன் மூலமாகவோ அல்லது புதுப்பிக்க மறுப்பதன் மூலமாகவோ இவ்வசதியை முடிவுறுத்த வங்கி அதிகாரமுடையது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

xv. இலங்கை ரூபாவிலல்லாத வேறு நாணயமொன்றில் மேற்கொள்ளப்பட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றும் இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றம் செய்யும் திகதியன்று ''விசா இன்டநெ'னல்'' இனால் ஏற்கப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு நாணயமாற்று விகிதத்தில் பரிமாற்றஞ் செய்யப்பட்ட பின்னர், அத்துடன் வங்கியால் அறவிடப்படும் ''விசா இன்டநெ'னல்'' இனால் வங்கி மீது விதிக்கப்படும் பரிமாற்றக் கட்டணம் எதுவும் ஏற்புடைத்தாயின் (அத்தகைய கட்டணம் வங்கியுடன் பங்கு போடப்படலாம்) அதனையும் சேர்த்தும் வாடிக்கையாளரினால் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக் கொள்கிறார்.

xvi. வெளிநாட்டில் அசையாச் சொத்துக்களை அல்லது நிதிசார் சொத்துக்களை வாங்குவதற்காக கொடுப்பனவு செலுத்துவதற்கு அவரது அட்டையை பயன்படுத்தலாகாது.

xvii. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டம் அல்லது அவ்வப்போது நடைமுறைக்கு வரும் வேறு ஏதேனும் பிற விதிமுறைகளின் படி அட்டையைப் பயன்படுத்த வேண்டும்.

xviii. இவ்வட்டையானது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் (அவ்வப்போது திருத்தப்படலாம்) மற்றும் அவ்வப்போது நடைமுறைக்கு வரும் வேறு ஏதேனும் பிற விதிமுறைகளின் படி அட்டையை இயக்க வேண்டும். வணிக நோக்கங்களுக்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதன் பொருட்டு பற்றுஅட்டை / கடனட்டை பயன்படுத்தப்படக் கூடாது.

## 12. வேறு நியதிகளும் நிபந்தனைகளும்

### i. வங்கிச் சேவைகளின் செலவு

**a) வட்டியும் கட்டணங்களும்**

வங்கிக்கு செலுத்த வேண்டிய பணத்தின் மீதான வட்டி மற்றும் வங்கியால் வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களை, வங்கியுடன் அவ்வப்போது செய்து கொள்ளும் எழுத்திலான உடன்பாட்டின் அடிப்படையில் அத்தகைய விகிதத்திலும் /விகிதங்களில், அத்தகைய முறையிலும், அத்தகைய நேரத்திலும், அல்லது அத்தகைய எழுத்திலான உடன்பாடொன்று இல்லாத சமயத்தில் வங்கியால் தீர்மானிக்கபடுகின்றவாறும் வாடிக்கையாளர் செலுத்துதல் வேண்டும்.

**b) தாமதமான தொகைகள் மீதான வட்டி**

வங்கியானது, அதன் தற்றுணிபின் அடிப்படையில், செலுத்தப்படாத தொகைகள் அல்லது முன் உடன்படிக்கையன்றி பெறப்பட்ட பற்றுத் தொகைகள் மீது உயர் வட்டி வீதமொன்றை வசூலிக்க உரிமையுடையது, மேலும் வங்கியால் தீர்மானிக்கப்படும் அவ்வட்டியை அவ்வப்போது அதிகரிக்கலாம்.

**c) வட்டி மற்றும் கட்டணங்களில் மாற்றங்கள்**

மாறுபடக்கூடிய வட்டி விகித வசதியின் விடயத்தில், அக்குறித்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப வட்டி விகிதம் சீர்செய்யப்படும். எழுத்தில் வேறு வகையாக உடன்பட்டிருந்தாலன்றி, வங்கியானது, சேவைகளுக்கான கட்டணங்களை தனது நியாயமான விருப்பப்படி மாற்றியமைக்கலாம்.

**d) செலவுகள்**

வங்கியால் வழமையாக அறவிடப்படும் அனைத்து தரகுக் கட்டணங்கள், பிற விதிப்பனவுகள், அவை வாடிக்கையாளருக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மற்றும் இந்த பொது நிபந்தனைகளின் கீழ் அல்லது சிறப்பு நிபந்தனைகள் கீழ் அல்லது வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும இடையிலான வேறு எந்த ஒப்பந்தங்களின் கீழ் வங்கிக்கு ஏற்படும் அனைத்து பிற செலவுகளையும், கட்டணங்களையும், கைச்செலவுகளையும், ஏதேனும் சட்டச் செலவுகள் உட்பட, அவை கோரப்படுவதன் மீது உடனடியாக வங்கிக்கு வாடிக்கையாளக் செலுத்த வேண்டும் அல்லது மீளளித்தல் வேண்டும். அத்துடன், அவற்றை வங்கியின் எந்தவொரு கணக்கிலும் பற்றுவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**e) வரியும் ஏனைய அறவீடுகளும்**

வாடிக்கையாளருடன் வங்கி மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளையும், முத்திரைத் தீர்வைகளையும் அல்லது வேறு ஏதேனும் வரிகளையும் வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்தக் கடப்பாடுடயைவர் ஆவார்.

### ii. இறப்பு, தகுதியீனம் அல்லது திவாலாகுதல்

வாடிக்கையாளரின் இறப்பு, தகுதியீனம் அல்லது திவாலான நிலைமை என்பவற்றின் போது, வாடிக்கையாளரின் வைப்பானது, வாடிக்கையாளரின் அல்லது இறந்தவரின் நிறைவேற்றுநராக, நிர்வாகியாக அல்லது தனிப்பட்ட பிற பிரதிநிதியாக, அத்துடன் சொத்துக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராக,

பெறுநராக, அல்லது ஏதேனும் கருதப்படு பயனாளியாக பெயரிடப்பட்ட நபருக்கு அல்லது நபரினால் விடுவிக்கப்படுவதற்கு வங்கி அனுமதிக்கும் முன்னர், அது பற்றி வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அத்தகைய (நிருவாகத் தத்துவப் பத்திரங்கள், இயைபான நீதிமன்றக் கட்டளைகள், அல்லது அவற்றை நிகர்த்த அத்தைகைய) ஆவணச் சான்றை சமர்ப்பிக்கமாறு தேவைப்படுத்த வங்கி உரித்துடையதாதல் வேண்டும். வங்கி அவ்வாறு கோருமாயின், ஏதேனும் ஆவணச் சான்றின் மூலப்பிரதி (ஏற்புடைத்தானவிடத்து) வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஆங்கில மொழிபெயர்ப்புடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கூட்டுக் கணக்குடைமையாளர் எவரதும் இறப்பு, தகுதியீனம் அல்லது திவாலான நிலைமையானது, அத்தகைய நிகழ்வு பற்றிய எழுத்து மூலமான அறிவித்தலொன்றை வங்கி நம்பகரமானது என அது கருதும் மூலமொன்றிலிருந்து அது பெறும் வரை, அந்நிகழ்வு வங்கியைப் கட்டுப்படுத்த முடியாது. பொருத்தமான அறிவித்தல் பெறப்பட்டதும், வங்கியானது, அதன் திருப்திக்கமைந்த மேலே சொல்லப்பட்டவாறான சான்றைப் பெறும் வரை அந்தக் கணக்கை/ கணக்குகளை முடக்குவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.
ஒரு கணக்கில் உள்ள பணத்திற்கு யாராவது பெயரிடப்பட்டிருந்தால், தரப்பட்ட அத்தகைய பெயரிடலுக்கு ஏற்ப பணம் விடுவிக்கப்படும் என்பதுடன், அத்தகைய பெயரிடலானது இறுதி விருப்பாவணத்தில் உள்ள ஏற்பாடுகள் உட்பட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களையும் விஞ்சுவதாக இருக்கும்.

**iii. வெளிநாட்டு நாணய ஆபத்து வெளிப்பாடு**

வெளிநாட்டு நாணய முதலீடுகளில் ஏற்படும் இழப்புக்களின் அபாயங்கள் குறித்து வாடிக்கையாளர் முழுமையாக அறிந்திருப்பதாகவும், அதில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய நிதி மற்றும் பிற இடர்களை ஏற்க வாடிக்கையாளார் தயாராக இருப்பதாகவும், வாடிக்கையாளர் அதில் ஈடுபடுவதால் ஏற்படும் எந்த ஒரு இழப்பிற்கும் வாடிக்கையாளர் எந்த வகையிலும் வங்கியை பொறுப்பாக்க முடியாது என்றும் இதன் மூலம் பிரகடனம் செய்கிறார்.

**iv. எதிரீடு மற்றும் பிணைக்கடன்**

**(அ). ஈடுசெய்தல்/பிணைக்கடன் மீதான உடன்படிக்கை**

வங்கியின் உடைமைக்கு வந்துள்ள அல்லது வரக்கூடிய எந்தவொரு பிணைப் பொறுப்புக்கள், ஆதனங்கள் மீது பிணைக்கடனை மற்றும்/அல்லது பாதுகாப்பு உரிமையை வங்கி பெற்றுக் கொள்கிறது என்ற விடயத்தில் வாடிக்கையாளரும் வங்கியும் உடன்படுகின்றனர். மேலே கூறப்பட்டவை எந்தவொரு பொது அல்லது வங்கியாளரின் பிணைக்கடன் அல்லது எதிரீட்டு உரிமை அல்லது வங்கிக்கு உரிமையுடையதாக இருக்கும் வேறு எந்த உரிமையையும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். இதிலடங்கியுள்ள நோக்கத்திற்காக வங்கியால் தேவைப்படுத்தப்படும் அத்தகைய செயலைச் செய்ய அல்லது அத்தகைய ஆவணங்களுக்கு கையொப்பமிட வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

**(ஆ). உத்தரவாதக் கோரிக்கைகள்**

வங்கியுடனான உறவிலிருந்து எழும், அனைத்து தற்போதைய, எதிர்கால மற்றும் நிகழச் சாத்தியாமான உரிமைக் கோரிக்கைகளையும் (அதாவது, அவை இந்த நிபந்தனைகளின் கீழ் எழுவனவாயினும் அல்லது எவையேனும் சிறப்பு நிபந்தனைகளின் கீழ் எழுவனவாயினும் அல்லது அவை ஏதேனும் உடன்படிக்கை அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எழுவனவாயினும், அவை முதல் தொகையாக, பிணையாக அல்லது வேறு ஏதேனுமாக உள்ளவாறான அல்லது எதிர்கால அல்லது நிகழச் சாத்தியமான கொடுக்கல் வாங்கல்களாக இருப்பினும், அத்துடன் எந்த நாணயத்தில் இருப்பினும், அவற்றின் கீழ் எழுகின்ற உரிமைக் கோரிக்கைகளைப்) பாதுகாக்க இந்தப் பிணைக்கடன் மற்றும் பாதுகாப்பு உரிமையானது பயன்படுகிறது என்பதுடன், இது வாடிக்கையாளருக்கு எதிராக வங்கிக்கு உள்ள உரிமையாகும்.

**(இ). வட்டி மற்றும் பங்கிலாபக் கூப்பன்**

பிணைப் பொறுப்புக்கள் வங்கியின் பிணைக்கடன் உரிமைக்கு உட்பட்டதென்றால், அத்தகைய பிணைப் பொறுப்புக்களோடு தொடர்புபட்ட வட்டி மற்றும் பங்கிலாபக் கூப்பன்களை ஒப்படைக்குமாறு கோருவதற்கு வாடிக்கையாளருக்கு உரிமையில்லை.

**v. வங்கிச் சேவை இரகசியம்**

பொதுச் சட்டத்தின கீழ் வாடிக்கையாளர் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்திருக்க வங்கி கடமைப்பட்டுள்ளது என்பதுடன், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் பிரிவு 77 இற்கு ஏற்ப அதன் அலுவலர்கள் மீதும் இதே போன்ற கடப்பாடு சுமத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீதிமன்றமொன்றினால் அவ்வாறு செய்ய கோரிக்கை விடப்படும் போது அல்லது அந்த வாடிக்கையாளரால் அவ்வாறு செய்ய வங்கிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள போது அல்லது அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு இணங்கியொழுகும் பொருட்டு, வங்கியானது வாடிக்கையாளர் ஒருவர் பற்றிய அல்லது அவரது கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அல்லது அவரது கணக்குகள் பற்றிய தகவலை வெளியிடலாம்.

**vi. தரவுப் பாதுகாப்பு**

வாடிக்கையாளரால் திறக்கப்பட்டு, வங்கியில் பேணப்படும் எந்தவொரு கணக்கு வகைக்கான ஆணையில் கையொப்பம் இடுவதன் மூலம், வாடிக்கையாளர் குறிப்பாக பின்வருவனவற்றிற்கு இணங்கி தனது ஒப்புதலை அளிக்கிறார்:

i. மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது குறுந்தகவல் மற்றும் / அல்லது அலைவழிச் சந்தையிடல் (டெலிமார்கடிங்) போன்ற வேறு ஏதேனும் ஊடகம் மூலமாகவோ நேரடி சந்தைப்படுத்தல் செய்திகளுக்காக வாடிக்கையாளரின் தனிப்பட்ட தரவுகளை நெறிப்படுத்தல்.

ii. கணக்கு விபரக்கூற்று அச்சிடுதல், அட்டை பொறித்தல் மற்றும் இது போன்ற தேவைகளுக்காக வாடிக்கையாளர் தரவுகளை மூன்றாந் தரப்பு சேவை வழங்குநர்களுக்கு வெளிப்படுத்தல்.

iii. அத்தகைய தனிப்பட்ட தரவுகளைமூமூ இலங்கைக்கு வெளியே சேமித்து வைக்கவும்,

மூ இலங்கையின் நியாயாதிக்கத்திற்கு வெளியே உட்படுத்தவும்.

2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 14(1) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய சம்மதத்தை திரும்பப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

மூமூ ''தனிப்பட்ட தரவு'' என்பது, பின்வருவனவற்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தரவுடன் தொடர்புபட்ட ஒருவரை அடையாளங்காண முடியுமான எவையேனும் தகவல்கள்:

அ. ஒரு பெயர், இணங்காண் இலக்கம், நிதிசார் தரவு, அமைவிடத்தரவு அல்லது ஓர் இயங்கலை அடையாளங்காட்டி போன்றவோர் அடையாளங்காட்டி அல்லது

ஆ. அந்தத் தனிநபரின் அல்லது இயற்கையாளின் உடல்சார், உடல்நூல்சார், மரபுவழி, உளஞ்சார், பொருளாதார, கலாசார அல்லது சமூக அடையாளத்துக்குக் குறிப்பான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகள்.

**vii. வெளிப்படுத்துகை**

வாடிக்கையாளரானவர், அவர் தொடர்பாக அல்லது அவரது கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கணக்குகள் தொடர்பாக பின்வருவோருக்கு ஏதேனும் தகவலை வெளியிடுவதற்கு இத்தால் அதிகாரம் வழங்குகிறார் :

i. வாடிக்கையாளரின் அல்லது வங்கியால் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வங்கிச் சேவை வசதி அல்லது சேவை தொடர்பிலான அவரது கணக்கின்/கணக்குகளின் உத்தரவாதமளிப்பவர் எவருக்கும், அல்லது பிணைப்பொறுப்பு வழங்கும் மூன்றாம் திறத்தவர் எவருக்கும்ளூ அல்லது

ii. வாடிக்கையாளர் தொடர்பிலான வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் சம்பந்தமான எவரேனும் நியமனதாரர் அல்லது நியமனதாரராக வரக்கூடியவர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தத் திறத்தவர் எவருக்கும்.

**viii. பொறுப்புக் கோட்பாடுகள்**

வங்கியானது, தனது கடமைகளை நிறைவேற்றுகின்ற போது, தமது ஊழியர்களினால் வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தவறொன்றுக்கோ அல்லது பாரிய அலட்சியத்துக்காகவோ மாத்திரமே பொறுப்பாதல் வேண்டும். நிகழ்ந்த இழப்புக்கு அவரது சொந்தத் தவறின் மூலம் (உதாரணமாக, இந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட கடமைகளை மீறுவதன் மூலம்) பங்களித்திருப்பின், வங்கியும், வாடிக்கையாளரும் எந்ததெந்த அளவுக்கு இழப்பை பொறுப்பேற்றல் வேண்டும் என்பதை, பங்களிப்புக் கவனயீனக் கோட்பாடுகள் நிர்ணயித்தல் வேண்டும்.

**ix. இழப்பீடு**

வாடிக்கையாளருக்கு கடன் அல்லது ஏனைய வங்கிச் சேவை வசதிகளை வழங்கியதால் அல்லது வாடிக்கையாளருக்காக ஏதேனும் வங்கிச் சேவையை நிறைவேற்றியதால் எழுவதாக அல்லது அவை தொடர்பதாக வங்கிக்கு ஏற்பட்ட அல்லது வங்கியால் பொறுத்துக் கொள்ளப்படும் எவையேனும் அல்லது எல்லா உரிமைக் கோரிக்கைகள், கோரிக்கைகள், செயல்கள், சேதங்கள், பொறுப்புகள், செலவுத் தொகைகள், இழப்புகள், செலவுகள், மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பவற்றுக்கு எதிராக வாடிக்கையாளரானவர் வங்கிக்கு இழப்பீடு கொடுத்தல் வேண்டும் என்பதுடன், அவை காரணமாக வங்கியால் செய்யப்படக்கூடிய அல்லது வங்கிக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் அத்தகைய கொடுப்பனவுகள் வேண்டப்படும் போது அவற்றை வங்கிக்கு மீளளித்தலும் வேண்டும்.

வங்கி அதன் தரப்பில் ஏதேனும் வேண்டுமென்றேயான தவறுகையின்றி, வாடிக்கையாளரின் அல்லது அவரது பிரதிநிதியின் சட்டத் தகுதியீனத்தின் மீதான எவையேனும் மட்டுப்பாடுகள் பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளாததன் காரணமாக வங்கிக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்காக வாடிக்கையாளர் வங்கிக்கு இழப்பீடு செலுத்துவார்.

**x. காலவிதிப்பு**

ஒரு கடன் அல்லது அதன் மீதான வட்டி தொடர்பில் வாடிக்கையாளரால் வங்கிக்கு வரவேண்டியுள்ள ஏதேனும் பணத்தை, காலவிதிப்புக் கட்டளைச் சட்டம் (அத். 68) எவ்வாறிருப்பினும், வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட பணத்தொகையை அறவிடுவதற்காக வங்கி வாடிக்கையாளருக்கு எதிராக வழக்கிடுதலை காலவிதிப்புக் கட்டளைச் சட்டம் (அத். 68) தடுக்கின்றது என வாதிக்கமாட்டார் என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

**xi. தவிர்க்க முடியாத சூழ்நிலை**

கலவரம், போர், இயற்கை அழிவு, வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் சூழ்நிலை அல்லது வங்கி பொறுப்பேற்க முடியாத வேறு நிகழ்வுகள் (உதாரணமாக, வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள், போக்குவரத்துத் தடைகள், சிவில் கிளர்ச்சி, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களின் அல்லது ஏனைய அதிகார நிறுவனங்களின் நடவடிக்கைகள் (சட்ட ரீதியானதாகவோ அல்லது சூழ்நிலை ரீதியானதாகவோ இருக்கலாம்), ஒரு குறிப்பிட்ட சட்டம் அல்லது ஒழுங்கின் தேவைப்பாடுகள், சந்தைச் சீர்குலைவு அல்லது ஏதேனும் கற்கை /தீர்வுகாணல் முகவரகத்தின் அல்லது மத்திய வைப்பகத்தின் நடவடிக்கை என்பன உள்ளடங்களாக, ஆனால் அவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத, அவற்றினால் எவையேனும் எதிர்பாராச் சம்பவங்கள் நிகழுகின்ற போது, அவற்றுடன் தொடர்புடையதாக அல்லது அவற்றால் ஏற்பட்ட ஏதேனும் இழப்பிற்கு அல்லது நிறைவேற்றவியலாமைக்கு வங்கியானது பொறுப்பாதல் ஆகாது.

**xii. தகவலும், அறிவித்தல்களும்**

அ. வாடிக்கையாளரது பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொடர்பிலக்கம் மற்றும் ஏனைய விபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அவற்றையும், அத்துடன் வங்கியுடன் தொடர்புபட்ட எவரேனும் நபருக்கு அளிக்கப்பட்ட எவையேனும் பிரதிநிதித்துவத் தத்துவங்களை (குறிப்பாக, அற்றோனி தத்துவமொன்று) அல்லது எவரேனும் நபரின் அதிகாரத்திற்கு அளிக்கப்பட்ட எவையேனும் பிரதிநிதித்துவத் தத்துவங்களின் முடிவுறுத்துகை அல்லது அவற்றுக்கு திருத்தம் கொண்டுவருவது பற்றி வங்கிக்கு வாடிக்கையாளர் தாமதமின்றி எழுத்தில் அறிவிக்க வேண்டும். இவ்வறிவித்தலானது ஏதேனும் பொது இடாப்பில் உள்ளதும், பிரதிநிதித்துவங்கள் அத்தகைய பொது இடாப்பில் பதியப்பட்டு அவற்றில் ஏதேனும் முடிவுறுத்துகை அல்லது அவற்றுக்கான திருத்தம் அத்தகைய இடாப்பில் இடப்பட்டும் இருக்குமிடத்து உள்ளதுமான வாடிக்கையாளரின் விபரங்களுக்கான ஏதேனும் மாற்றத்துக்கு உரியவாறு ஏற்புடையது.

ஆ. வாடிக்கையாளரின் வர்த்தகம், வியாபாரம் அல்லது தொழில் மற்றும் நிதிநிலைமை என்பன பற்றி அல்லது அவை தொடர்பிலான முக்கிய மாற்றம் பற்றி ஆன எல்லா விபரங்களும் வாடிக்கையாளரால் வங்கிக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இ. வாடிக்கையாளரின் நிதித் தத்துவத்தைப் பாதிக்கக் கூடிய ஏதேனும் வழக்கு நடவடிக்கை அல்லது எதிர்காலத்தில் வழக்கிடத்தக்க நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் வாடிக்கையாளரால் வங்கிக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஈ. வங்கியானது, ஏதேனும் அறிவித்தல், கடிதத்தொடர்பு, சாதனம் அல்லது ஆவணத்தை வாடிக்கையாளருக்கு சாதாரண தபால் மூலம், நேரே கையளிப்பதன் மூலம், தொலையஞ்சல் மூலம் அல்லது தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் (வங்கிக்கு அறியக்கிடைத்த வாடிக்கையாளரின் கடைசியாக அறியப்பட்ட அஞ்சல் முகவரி அல்லது தொலையஞ்சல் இலக்கம் அல்லது தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு), தனது தற்றுணிபில் பொறுப்புச் சாராது, அனுப்புவதற்கு உரித்துடையதாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்பு (உள்நாட்டில் எனின்) தபாலில் இட்டதிலிருந்து இரண்டு (02) நாட்களின் பின்னரும், (வெளிநாட்டில் எனின்) தபாலில் இட்டதிலிருந்து ஐந்து (05) நாட்களின் பின்னரும், (தொலையஞ்சல் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் எனின்) அனுப்பப்படும் போதும், (நேரே கையளிப்பதன் மூலம் எனின்) ஒப்படைக்கப்படுவதன் மேலும், வாடிக்கையாளரால் பெறப்பட்டுள்ளது எனக் கருதப்படுதலும் வேண்டும்.

## 13. முடிவுறுத்தல்

### i. வாடிக்கையாளரில் முடிவுறுத்தல் உரிமை

வங்கியும் வாடிக்கையாளரும் வேறு வகையிலான எழுத்துமூல முடிவுறுத்தல் ஏற்பாடொன்றுக்கு உடன்பட்டிருந்தாலன்றி, வாடிக்கையாளரானவர், எந்த நேரத்திலும், நியாயமான எழுத்திலான முன்னறிவித்தல் மூலம், முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆணையிலிருந்து எழும் வியாபார உறவை முழுமையாகவோ அல்லது குறித்த ஏதேனும் வியாபார உறவை பகுதியளவிலோ முடிவுறுத்தலாம். எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னராக வங்கிக்கு கிட்டியுள்ள உரிமைகளை அத்தகைய முடிவுறுத்தல்கள் எதுவும் பாதித்தல் ஆகாது.

### ii. வங்கியின் முடிவுறுத்தல் உரிமைகள்

**அ. அறிவித்தலின் மீதான முடிவுறுத்தல்**

வங்கியானது, அதன் அபிப்பிராயப்படி நியாயமானதெனக் கருதும் அறிவித்தலொன்றை வழங்குவதன் மீது, முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆணையிலிருந்து எழும், குறிப்பான காலப்பகுதியொன்றோ, அன்றேல் எழுத்திலே உடன்பட்டுக் கொண்ட முடிவுறுத்தல் ஏற்பாடொன்றோ அற்ற, வியாபார உறவை முழுமையாகவோ அல்லது குறிப்பாக அதில் ஏதேனும் பகுதியளவிலான உறவையோ எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம். அறிவித்தல் காலப்பகுதியை நிர்ணயிப்பதில், வங்கியானது நடைமுறைச் சாத்தியமான போதெல்லாம் வாடிக்கையாளரின் வெளிப்படையாகத் தெரியும் நியாயமான கரிசனைகளைக் கருத்திற்கொள்ளும்.

ஆ.**நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியைக் கொண்டிராத கடன்களினதும் வசதிகளினதும் முடிவுறுத்தல்**

நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிலையான தவணையோ, அன்றேல் எழுத்திலே உடன்பட்டுக் கொண்ட முடிவுறுத்தல் ஏற்பாடொன்றோ அற்ற கடன்கள், அல்லது கடன் வசதிகள் அல்லது வங்கிச் சேவை வசதிகள் / ஒப்புதல்கள் போன்றவற்றை வங்கியின் தற்றுணிபின் பேரில் முன் அறிவித்தலின்றி வங்கி எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம்.

இ. **நியாயமான காரணத்துக்கான முன்னறிவித்தலின்றி முடிவுறுத்தல்**

வாடிக்கையாளரின் வெளிப்படையாகத் தெரியும் நியாயமான கரிசனைகளைக் கருத்திற்கொண்ட பின்னர், அவருடன் வியாபார உறவை வங்கி தொடர்வதை ஏற்றுக் கொள்ள முடியாததாக ஆக்குகின்ற நியாாமான காரணம் இருக்கும் போது, வாடிக்கையாளரிடமிருந்து முறைப்படி ஒப்பமிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆணையிலிருந்து எழும் வியாபார உறவை முழுமையாகவோ அல்லது குறிப்பாக அதில் ஏதேனும் பகுதியளவிலான உறவையோ அறிவித்தலின்றி முடிவுறுத்த அனுமதிக்கப்படுகின்றது.

ஈ. **முடிவுறுத்தலையடுத்த தீர்ப்பனவு**

வியாபார உறவின் அல்லது வசதிகளின் முடிவுறுத்தலின் மீது வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு வரவேண்டிய எல்லாத் தொகைகளும், கடப்பாடுகளும், கோரப்படுகின்ற போது, உடனடியாக செலுத்தப்படவேண்டிய தொகையாக வருவதுடன், அவை செலுத்தப்படவும் வேண்டும். வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான எல்லா வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களும், அதன் சார்பாக எழும் வேறு கொடுக்கல் வாங்கல்களும், வங்கியின் தற்றுணிபின் பேரில், விரைவில் முடிவுறுத்தப்பட்டு, வங்கியால் நிர்ணயிக்கப்படும் அப்போதைய சந்தைப் பெறுமதியில்

செலுத்தப்படவேண்டிய தொகையாக வருவதுடன், அவை செலுத்தப்படவும் வேண்டும். வங்கி மீதான வாடிக்கையாளரின், நிலுவையிலுள்ள ஏதேனும் எதிர்கால அல்லது எதிர்பாராப் பொறுப்புத் தொடர்பில், வங்கி தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய நியதிகளின் படி போதிய பண ஒழுங்கை வாடிக்கையாளர் உடனடியாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உ. **உரிமைகள் பேணல்**

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஏற்பாடுகளின் கீழ், ஏதேனும் வியாபார உறவு முற்றுமுழுதாக அல்லது உறவின் குறிப்பான ஒரு பகுதி வங்கியால் முடிவுறுத்தப்படுதலானது, அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் வங்கி கொண்டுள்ள உரிமைகளைப் பாதித்தல் ஆகாது.

**14. ஒப்படைத்தல்**

இதன் கீழான உரிமைகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் வாடிக்கையாளரின் முன் அங்கீகாரம் பெறாமல் பிறிதொரு நபருக்கு சாட்டுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**15. ஏற்பாடுகளின் வலிதின்மை**

இதனுள் அடங்கியுள்ள ஏதாவதொரு ஏற்பாடு எந்த நேரத்திலாவது, எந்த வகையிலாவது, சட்டமுரணானதாக, வலிதற்றதாக, அல்லது அமுல்படுத்த முடியாததாக மாறுமெனில், அத்தகைய சட்ட முரண்பாடு, வலிதின்மை அல்லது அமுல்படுத்த முடியாமை, இதனுள் அடங்கியுள்ள ஏனைய ஏற்பாடுகளை பலமிழக்கச் செய்வதாகவோ, பாதிப்பதாகவோ அமையாது.

**16. விலக்களிப்பு**

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பம் அல்லது நிகழ்வு தொடர்பாக, இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுள் ஏதேனும் ஒன்றை வங்கி பொறுத்துக்கொள்ளல், புறக்கணித்தல் அல்லது விலக்களிப்புக் கொடுத்தல் எதுவும், அதன் பின்னர் அவற்றைக் கடுமையாக அமுல்படுத்துவதற்கான வங்கியின் உரிமைகளைப் பங்கப்படுத்துதல் ஆகாது. வங்கியிலான விலக்களிப்பு எதுவும் அது எழுத்தில் இருந்தாலன்றி நடைமுறைக்கு வராது.

**17. நியாயாதிக்கமும் ஆளும் சட்டமும்**

**i. நியாயாதிக்க இடம்**

வாடிக்கையாளருக்கெதிராக ஏதேனும் பிற நாட்டில் அல்லது பிற நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான வங்கியின் உரிமைக்குப் பங்கமின்றி, வாடிக்கையாளர் இரத்துச் செய்ய முடியாத வகையில், நிரந்தரமாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு உட்படுகிறார். (வங்கிக்கு எதிராகவும் கூட இலங்கை நீதிமன்றங்களில் மாத்திரமே வழக்கிட முடியும்.)

**ii. பொருண்மைச் சட்டம்**

இதனுள் அடங்கியுள்ளதாகக் கருதப்படும் வியாபாரத் தொடர்பு, வாடிக்கையாளர் கணக்குகள், பரிவர்த்தனைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், அத்துடன் பணிப்பாணை என்பனவும் இலங்கைச் சட்டங்களால் ஆளப்படுதல் வேண்டும்.

**18. இலத்திரனியல் பணப்பை மற்றும் பிற இலத்திரனியல் தயாரிப்புகள்**

இக்குறிப்பிட்ட தயாரிப்புக்கு அடிப்படையில் தேவையான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளானவை “ஏற்ற மாற்றங்களுடன்” டிஜிடல் (இலத்திரனியல்) பணப்பை மற்றும் பிற டிஜிடல் (இலத்திரனியல்) தயாரிப்புகள், மற்றும் காலத்துக்கு காலம் வங்கியால் வழங்கப்படும ஏனைய சேவைகளுக்கும் பொருந்தும்.

**19. பணமோசடி தடுப்பு (AML) மற்றும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) என்பவற்றிற்கான தேவைப்பாடுகள்**

வங்கி காலத்துக்கு காலம் வாடிக்கையாளர்கள் விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டியிருப்பதனால், வாடிக்கையாளர்கள் வங்கிக்கு திருப்திகரமான தகவலை/ஆவணங்களை வழங்க வேண்டும்.

**20. பொருள்கோடல் (விளக்கம்)**

இந்தப் பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஒருமை எண்ணைக் குறிக்கும் சொற்கள் பன்மையை உள்ளடக்கலும், நேர் மாறாகவும், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலையும், ஆட்களைக் குறிக்கும் சொற்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பனிகளை உள்ளடக்குதலும் வேண்டும்.

வசதிக்காக மட்டும் தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதுடன், அவை இநத ஆவணத்தின் கட்டமைப்பைப் பாதித்தலாகாது.

எந்தவொரு நியதிச்சட்ட ஏற்பாடு, ஒழுங்கு விதி, விதிமுறை, கட்டளை அல்லது பணிப்பு பற்றிய குறிப்பு காலத்துக்கு காலம் மறுசீரமைக்கப்பட்ட, திருத்தப்பட்ட, விரிவாக்கப்பட்ட, சேர்ப்புச் செய்யப்பட்ட, பதிலீடு செய்யப்பட்ட அத்தகைய ஏற்பாடு, ஒழுங்கு விதி, விதிமுறை, கட்டளை அல்லது பணிப்பு பற்றியதொரு குறிப்பை உள்ளடக்குதல் வேண்டும்.